செ.தி.எண்: 184 நாள்: 12.11.2011

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 12.11.2011

திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், கோலடி கிராமம், அன்பு நகரைச் சேர்ந்த திரு. பழனி என்பவரின் குழந்தை அவினாஷ் **10.11.2011** அன்று வீட்டின் அருகே உள்ள பள்ளத்தில் தேங்கியிருந்த நீரில் மூழ்கி உயிரிழந்தான் என்ற செய்தியையும்;

சென்னை, வளசரவாக்கம், ஆற்காடு சாலையில் **11.11.2011** அன்று இரு சக்கர வாகனம் ஒன்றின் மீது அரசு பேருந்து மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த, சென்னை, நந்தனம், சி.ஐ.டி. நகரைச் சேர்ந்த திரு. கிருஷ்ணன் என்பவரின் மகன் திரு. வெற்றிவேல் உயிரிழந்தார் என்ற செய்தியையும், அறிந்து நான் மிகவும் துயருற்றேன்.

இந்த விபத்துகளில் அகால மரணமடைந்த குழந்தை அவினாஷ் மற்றும் திரு. வெற்றிவேல் குடும்பத்ினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் காலமான குழந்தை அவினாஷ் மற்றும் திரு. வெற்றிவேல் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9